பக்கங்கள்: 07

# காலைக்கதிர்
Kalaikkathir

விழுயல் 09 வள்ளுவர் ஆண்டு 2056 ஆனி 09 திங்கட்கிழமை 23.06.2025 கதிர் 226

**இது ரகசியம் அல்ல!**

இன்றுசெம்மணியில்'அணையா விளக்கு' போராட்டத்திற்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. ஆனால் அது குறித்து தமிழ் அரசுக் கட்சி தவிர்த்து, தமிழ்த் தேசியத்தை ☞ 2

# இனவழிப்பின் சாட்சி செம்மணி அதைப் பறைசாற்ற அணிதிரள்க

## இன்று தொடங்கும் அணையா விளக்கு போராட்டத்திற்கு அழைப்பு




யாழ்ப்பாணம் செம்மணியில் இன்று ஆரம்பமாகவுள்ள 'அணையா விளக்கு' போராட்டத்தில், தமிழ் இனவழிப்பின் சாட்சியாகக் கிடக்கிறது செம்மணி என்பதைப் பறை சாற்றும் வகையில் அனைவரையும் அணி திரளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.கட்சிபேதங்களைக் கடந்து நீதிக்காக அனைவரையும் திரளுமாறு இந்தப் போராட் டத்தை ஏற்பாடு செய்துள்ள 'மக்கள் செயல்' அமைப்பு கோரியுள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர் ஆணையர் இலங்கை வருவதையொட்டி இன்று தொடங்கும்இந்தப்போராட்டம்,மூன்று நாள்க ளுக்குத் தொடர்ந்து நடக்க விருக்கின்றது. செம்மணியின் மீது ஐ.நா. உள்ளிட்ட சர்வதேச சமூகத்தின் கவனத்தைஈர்ப்பதையும்நோக்கமாகக் கொண்டுள்ளது.

காலை 10 மணிக்கு செம்மணியில் அமைந்துள்ள யாழ்ப்பாணம் வரவேற்கின்றது வளைவுப் பகுதியில் போராட்டம்தொடங்கவுள்ளது.அதைத் தொடர்ந்துஇந்தப்போராட்டம்மூன்று தினங்கள் இரவு பகலாகத் தொடரவுள்ளது. இன்று காலை 10 மணிக்கு அணையாத தீபம் ஏற்றப்படும். அந்த தீபத்தை, ☞ 2

## "என் கணவர் ஒரு நிரபராதி" அளுத்கமகேயின் மனைவி

தனது கணவர் நிரபராதி எனறு சிறையில் அடைக்கப்பட்டுள்ள முன்னாள் விளையாட்டு அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகேவின்மனைவியும்,மறைந்தபிரதமர் ஜெயரத்னாவின் மகளுமான செனானி ஜெயரத்னா தெரிவித்துள்ளார்.

சமீபத்தில் ஒரு பெரிய ஊழல் வழக்கில்தனதுகணவர்தண்டிக்கப் பட்டதைத் தொடர்ந்து, அவரைப் பாதுகாத்து அறிக்கை ஒன்றை விடுத்துள்ளார்.

அளுத்கமகேவின் அதிகாரப் பூர்வபேஸ்புக்பக்கத்தின்மூலம்பகிரப் பட்டஒருநீண்டபதிவில்,ஜெயரத்னா தனது கணவர் நிரபராதி என்றும், தற்போதைய தேசிய மக்கள் சக்தி (NPP) தலைமையிலான ஆளும்தரப்பின்கீழ், சட்டஅமுலாக் கல் அதிகாரிகள் மீது அரசியல் ரீதியாகசெல்வாக்குசெலுத்தப்பட்டதா கவும் கூறினார். நீதி அமைச்சரின் சமீபத்தியகருத்துமீதும்அவர்கேள்வி எழுப்பினார், என்பிபி அதிகாரத்தில் இல்லாவிட்டால் அத்தகைய தீர்ப்பு வழங்கப்பட்டிருக்காது என்று சுட்டிக்காட்டினார்.

ராஜபக்சே ஆட்சியின் போது ரூ. 53 மில்லியன் அரசு நிதியை தவறாகப் பயன்படுத்தியதற்காக கொழும்பு உயர் நீதிமன்றத்தால் அளுத்கமகேவுக்கு 20 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. அதே வழக்கில் குற்றவாளியாகக் கருதப்படும் முன்னாள் வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோவுக்கு 25 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. 2015 ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னதாக பொது நிதியைப் பயன்படுத்தி கேரம் போர்டுகளைவிநியோகித்ததில்அரச நிதியை வீணடித்த குற்றவாளிகள் இவர்கள் என்று நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியிருந்தது.

### 'அணையா விளக்கு'க்குக் ஆதரவாக

## ஒந்தாச்சிமடத்திலும் இன்று தீப் பந்தம் ஏந்தி போராட்டம்

யாழ். செம்மணியில் இன்று தொடங்கும்'அணையா விளக்கு' போராட்டத்துக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் இனறு மட்டக்களப்பிலும் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

கோட்டைக்கல்லாறு, ஒந்தாச்சிமடப்பாலத்தடியில் மாலை 6 மணியளவில் இந்தப் போராட்டம் இடம்பெறும் என்று தமிழ் அரசுக் கட்சியின் மட்டு. மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் அறிவித்துள்ளார்.

இந்தப் போராட்டத்தில் கிழக்கு வாழ் தமிழ் மக்கள் அனைவரும் பங்கேற்கவேண்டும் என்றும் அவர் அழைப்பு விடுத்துள்ளார்.

அவர், மட்டக்களப்பில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிபோது மேலும் தெரிவித்ததாவது:

தீப்பந்தங்கள் ஏந்தி இந்தப் போராட்டம் நடைபெறவுள்ளது. இதில் எங்களுடைய கிழக்கு மாகாணத்தில் வாழும் அனைத்து தமிழ் உறவுகளும் அனைத்து உணர்வாளர்களும் கலந்துகொள்ளவேண்டும் என்று பகிரங்கமாக அழைப்பை விடுக்கின்றோம்.

செம்மணி மனிதப் புதைகுழிக்குச் சர்வதேச நீதி கோரி 'அணையா விளக்கு' போராட்டம் யாழ்ப்பாணத்தில் 23, 24 மற்றும் 25 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது. அந்தப் போராட்டத்துக்கு ஆதரவாக - அதற்கு வலுச்சேர்க்கும் வகையில் மட்டக்களப்பில் இந்தப் போராட்டத்தை நாங்கள் ஏற்பாடு செய்திருக்கின்றோம்.

கட்சிபேதங்கள் இன்றி எங்களுடைய அனைத்து தமிழ் உணர்வாளர்களும் கலந்துகொள்ளுமாறு பகிரங்கமாக அழைப்பு விடுக்கின்றேன் - என்றார்.

## ஈரான் – இஸ்ரேல் போரின் விளைவை எதிர்கொள்ள முன்னாயத்தம் இல்லை

### ஆளும்தரப்பு மீது ஐக்கிய மக்கள் சக்தி குற்றச்சாட்டு

ஈரான் - இஸ்ரேல் போர் தீவிரமடைந்துவரும் நிலையில் அதன் விளைவுகளை எதிர்கொள்ள இலங்கை ஆளும்தரப்பிடம் எவ்வித முன்னாயத்தங்களும் இல்லை என ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க குற்றஞ்சாட்டியுள்ளார். ☞ 2

## வலி. வடக்கு காணிகளை விடுவிக்க 2ஆவது நாளாக நேற்றும் போராட்டம்

யாழ்ப்பாணம் வலி. வடக்கில் உயர் பாதுகாப்பு வலயத்திலுள்ள 2400 ஏக்கர் காணிகளை விடுவிக்க கோரிய போராட்டம் இரண்டாம் நாளாக நேற்றும் அறவழியில் மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

காணிகளை விடுவிக்க கோரி சனிக்கிழமை மயிலிட்டி சந்தியில் ஆரம்பிக்கப்பட்ட இந்தப் போராட்டத்தில் நேற்று 500ற்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டனர். போராட்டக் களத்திலேயே உணவு சமைத்து உண்டுகொண்டு அவ்விடத்தை விட்டு நகராமல் அமைதி வழியில் ☞ 2

## பயங்கரவாதச் சட்டத்தின் ஒடுக்குமுறைக்கு ருஷ்டியின் வழக்கு சரியான உதாரணம்

பலஸ்தீனர்களுக்கு ஆதரவாக சுவரொட்டி ஒட்டினார் என்ற குற்றச்சாட்டின் கீழ் கைது செய்யப்பட்ட மொஹமட் ருஷ்டியின் வழக்கானது பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் மிகமோசமான ஒடுக்குமுறை போக்கைக்காண்பிக்கின்றது என்று மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவிதுள்ளது. இது தொடர்பாக நீதி அமைச்சருக்கு அது ஒரு கடிதத்தையும் எழுதியுள்ளது.

சட்ட அமுலாக்க அதிகாரிகள் அச்சட்டத்தை முறையற்ற விதத்தில் பயன்படுத்துவதற்கு உள்ள சாத்தியப்பாட்டையும் இந்த வழக்கு தெள்ளத்தெளிவாகக் காண்பிப்பதாகவும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளதுடன், ஒடுக்குமுறைக்கு ஏதுவாக அமையக்கூடிய பல்வேறு அம்சங்களைக் கொண்டிருப்பதனால் பயங்கரவாதத் தடைச்சட்டத்தை முற்றாக நீக்கவேண்டியது அவசியம் எனவும் வலியுறுத்தியுள்ளது.

பயங்கரவாதத் ☞ 2

## மாகாணங்களுக்கு இடையிலான வழித்தட அனுமதியில் மோசடி

### ஆனால் நடவடிக்கை இல்லை என்கிறார் கணக்காய்வாளர் நாயகம்

பயணிகள் போக்குவரத்து ஆணையம் மாகாணங்களுக்கு இடையேயான ஐந்து வழித்தடங்களுக்கு சட்டவிரோதமாக ஐந்து அனுமதிச் சீட்டுகளை வழங்கியுள்ளது, ஆனால் தேசிய போக்குவரத்து ஆணையம் இது தொடர்பாக எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று தேசிய கணக்காய்வாளர் நாயகம் அலுவலகம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இரண்டு அல்லது அதற்கு ☞ 2

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

முன்வைத்து அரசியல் நடத்தும் மற்றைய கட்சிகளும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் ஒன்றியம் தவிர்ந்த ஏனைய பொது அமைப்புக்களும் கள்ள மௌனம் சாதிக்கின்றன. இவற்றுடன் தமிழ்க் கட்சிகளின் ஒற்றுமை மற்றும் தமிழ்த் தேசியம் என்று பேசும் பத்தி எழுத்தாளர்கள், கருத்துருவாக்கிகளும்கூடச் சேர்ந்து நிற்கின்றனர்.

இனம், தமிழ்த் தேசியம், தமிழ் இனத்திற்காக கொள்கை இணக்கப்பாடு என்றெல்லாம் பேசுபவர்களால் தமிழ் இனத்திற்கு நீதி கேட்டு நடக்கும் இந்தப் போராட்டத்தில் இணைந்துகொள்ள முடியவில்லை. அதற்கான ஒரேயொரு காரணமாக இருக்கக்கூடியது, இந்தப் போராட்டத்திற்கு முந்திக்கொண்டு தமிழ் அரசுக் கட்சியும் சுமந்திரனும் ஆதரவு தெரிவித்தமை மட்டுமே. அவர்கள் ஆதரவு தெரிவித்து விட்டமையால், இந்தப் போராட்டத்தினால் கிடைக்கக்கூடிய நன்மைகள் அல்லது பெயர் தமிழ் அரசுக் கட்சிக்கும் சுமந்திரனுக்கும் போய்விடுமோ என்கிற அச்சம்தான்.

இதுதான் இந்தக் கட்சிகளின் அடிநாதமான அரசியல். இவர்கள் ஓர் ஏமாற்றுப் பேர்வழிகள். மக்களின் துன்ப துயரங்களுக்காகவோ, அவர்களுக்கு நீதி வேண்டியோ இவர்கள் ஒன்றியை மாட்டார்கள். இவர்களுக்குத் தேவையானது எல்லாம், அதிகாரம், பதவி, பணம் ஆகியவை மட்டுமே. புதிய உலக ஒழுங்குக்கும், தமிழர்களின் அரசியல் இருப்புக்கும் ஏற்ற புதிய தலைமுறைத் தலைவர்களைத் தமிழ்ச்சமூகம் உருவாக்காத வரையில் இத்தகையவர்கள் தொடர்ந்தும் தமிழ் இனத்தின் பெயரால் இப்படித் தொடர்ந்தும் ஏமாற்றிக்கொண்டே இருப்பார்கள்.

........................

ஈரான் – இஸ்ரேல் போரில் அமெரிக்காவும் இப்போது நேரடியாகக் களம் இறங்கி இருப்பதால் அதன் விளைவுகளை வெகு விரைவில் உலகம் உணரவேண்டியிருக்கும் என்பதைப் புரிந்துகொள்வது கடினமல்ல. உலகின் எரிபொருள் தேவையில் கிட்டத்தட்ட மூன்றிலொரு பகுதியைக் கட்டுப்படுத்தும் ஹோமஸ் கால்வாயை மூடிவிடுவது என்று ஈரானிய நாடாளுமன்றம் முடிவெடுத்துள்ளது. எனினும் இறுதி முடிவு நாட்டின் உயர் பாதுகாப்புச் சபையின் கைகளிலேயே இருக்கின்றது. இருந்தாலும் இந்த முடிவு உலக எரிபொருள் சந்தையில் மிகப் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும். எரிபொருளுக்காக மீண்டும் வரிசையில் நிற்கவேண்டிய நிலை ஏற்படாது என்றபோதும் எரிபொருளுக்கு மிகப் பெரிய விலை கொடுப்பதற்கும், அதனால் ஏனைய பொருட்களின் விலை அதிகரிப்பிற்கு முகங்கொடுப்பதற்கும் மக்கள் தயாராக இருக்கவேண்டியது அவசியம்.

இந்த நிலைமையை முன்னுணர்ந்து இந்தியா மசகு எண்ணெய்யை ரஷ்யாவிடம் இருந்து வாங்கிக் குவித்து வருகின்றது. இலங்கை அத்தகைய முன்தயாரிப்பு எதையும் செய்யவில்லை. ரணில் தொடங்கிய பாலம் மற்றும் எண்ணெய் குழாய் திட்டங்களிலும் தற்போதைய என்பிபி ஆளும்தரப்பு ஆர்வம் காட்டியிருக்கவில்லை. அப்படியிருந்திருந்தால் ரஷ்யாவில் இருந்து இந்தியா வாங்கிக் குவிக்கும் எண்ணிலிருந்தாவது கொஞ்சம் கடன் கேட்டிருக்கலாம். இப்போது அதற்கும் வழியில்லை. எப்படியும் கடைசியில் இந்தியாவிடம்தான் அநுர கையேந்த வேண்டிய நிலை வரும். அதற்காகப் பின்னர் பாதுகாப்பு ஒப்பந்தம் என்ற பெயரில் இலங்கையை இந்தியாவிற்கு எழுதிக்கொடுக்க வேண்டிய நிலையும் வரலாம்.

இவற்றையெல்லாம் முன்னுணர்ந்து தமிழ் அரசியல் பரப்பு செயற்படுகின்றதா? ஈரான் – இஸ்ரேல் போரால் உருவாகிவரும் புதிய உலக ஒழுங்கு குறித்த அக்கறையும் அதற்கேற்ற இராஜதந்திர வழி தேடல்களும் தமிழ் அரசியல் தலைமையிடம் இருக்கின்றதா என்பதெல்லாம் பெரும் கேள்விகள்தான். நாம் இன்னும் ஐ.நாவையும் மேற்கு நாடுகளையும் எதிர்பார்த்து அவர்கள் ஏதாவது செய்வார்கள் என்கிற ஏக்கத்துடன் அதே பழைய அரசியல் பல்லவியையே பாடிக்கொண்டிருக்கின்றோம். இது எங்கு போய் முடியுமோ?.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## இனவழிப்பின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழர் தாயகத்தில் வலிந்து காணாமலாக் கப்பட்டவர்களின் உறவுகள், படுகொலை செய்யப்பட்ட மாணவி கிருஷாந்தியின் உறவினர், மதத் தலைவர்கள் ஏற்றி வைப்பர். தொடர்ந்து மலர் வணக்கம் இடம்பெறும். மூன்றாம் நாள் முடிவுவரையில் அந்த விளக்கு அணையாமல் பாதுகாக்கப்படும். இன்று மாலை நிகழ்வாக செம்மணி தொடர்பான கதை வாசிப்பு இடம்பெறும். இரவு நிகழ்வாக ஆவணப்படம் திரையிடப்படும்.

செம்மணிச் சந்தையில் நின்று, தமிழர்களுக்கு இழைக்கப்பட்ட கொடூரங்களுக்காக சர்வதேசத்திடம் நீதி கேட்டு சர்வதேசத்தை அழைக்கும் அணையா விளக்குப் போராட்டத்திற்கு அனைவரையும் வருகை தருமாறு ஏற்பாட்டாளர்கள் கோரியுள்ளனர். இப்போராட்டத்திற்கு பல்வேறு பொது அமைப்புக்களும் அரசியல் கட்சிகளும் தமது முழு ஆதரவை வழங்கியுள்ளன. தமிழ் அரசுக் கட்சி தனது உறுப்பினர்கள் அனைவரையும் இந்தப் போராட்டத்தில் பங்கேற்குமாறு அழைப்பு விடுத்துள்ளது.

தமிழ் மக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட படுகொலைகளுக்கும் இழைக்கப்பட்ட அநீதிகளுக்கும் நீதி கோருகின்ற இந்தப் போராட்டத்தில் அனைத்துத் தமிழ் மக்களும் பங்காளிகளாக இணைந்துகொள்ளவேண்டும் எனவும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

## வலி......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர்கள் போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.

ஆக்கிரமிப்பில் உள்ள நிலங்களுக்குரிய மூன்றாம் தலைமுறையினரும், பாடசாலை விடுமுறை நாளான நேற்று பதாகைகளைத் தாங்கியவாறு போராட்டத்தில் குதித்திருந்தனர்.

போராட்டத்தில் மயிலிட்டி, பலாலி, அந்ரனிபுரம், காங்கேசன்துறை உள்ளிட்ட காணிகளை சேர்ந்த மக்கள் கலந்து கொண்டுள்ளனர். அவர்களுக்கு ஆதரவாக வேறு இடங்களைச் சேர்ந்த பலரும் போராட்டத்தில் இணைந்துள்ளனர். வயோதிபர்கள் இளைஞர்கள், சிறுவர்கள், பெண்களின் என பல தரப்பினரும் போராட்டக் களத்தில் ஒன்றிணைந்து வருகின்றனர்.

1990 ஆம் ஆண்டு காலப்பகுதியில் போர் காரணமாக இந்த இடங்களில் இருந்து இடம்பெயர்ந்து போன மக்கள், போர் முடிந்து 15 ஆண்டுகள் கடந்த பின்னரும்கூட தமது நிலங்களுக்குத் திரும்பமுடியாத அவலத்தில் உள்ளனர்.

பதவிக்கு வரும் ஒவ்வொரு ஆளும்தரப்பும் இந்தக் காணிகளை விடுவிப்பதாகக் கூறினாலும் சிறுசிறு இடங்களை மாத்திரம் விடுவிப்பதோடு நிறுத்திவிடுகின்றன. மக்களின் காணிகள் முழுமையாக விடுவிக்கப்படவில்லை இதனால் வாடகை வீடுகளிலும் உறவினர் வீடுகளிலும் முகாம்களிலும் இன்றுவரையும் காணி சொந்தக்காரர்கள் வாழ்ந்து வருகின்றனர்.

தற்போது தமிழ் மக்களின் பலத்த ஆதரவை பெற்று அனைத்து காணிகளையும் உடனடியாக விடுவிப்போம் என்ற வாக்குறுதிகளை வழங்கி, ஆட்சிக்கு வந்த புதிய ஆளும்தரப்பும் இந்தக் காணிகளை விடுவிக்கும் அறிகுறிகள் தெரியவில்லை. ஆட்சிக்கு வந்து ஆறு மாதங்களை கடந்த பின்னும் பெரிய அளவில் காணி விடுவிப்பில் எவ்வித நடவடிக்கைகளையும் முன்னெடுக்கவில்லை என்றும் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் கண்ணீருடன் கூறினர்.

தமது காணிகள் விடுவிக்கப்படாத காரணத்தால் தாம் தொடர்ந்தும் அகதிகளாகவே வாழும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர் என்று போராட்டக்காரர்கள் கவலை தெரிவித்தனர்.

## மாகாணங்களுக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேற்பட்ட மாகாணங்களுக்கு இடையே பயணிகள் போக்குவரத்திற்காக பேருந்துகளை இயக்குவதற்கான அனுமதிகளை வழங்க ஆணையத்திற்கு மட்டுமே அதிகாரம் உள்ளது என்றும் அறிக்கை கூறுகிறது.

1991ஆம் ஆண்டு 37ஆம் எண் கொண்ட தேசிய போக்குவரத்து ஆணையச் சட்டத்தின் பிரிவு 18இன் படி அத்தகைய நடவடிக்கை எடுக்க முடியாது என்றும் அது கூறுகிறது.

பயணிகள் சேவை அனுமதிச் சீட்டுகளை வழங்குவதற்கான ஒரு பரிந்துரைக் கப்பட்ட நடைமுறையை ஆணையம் அறிமுகப்படுத்தவில்லை என்று கூறும் தணிக்கைப் பிரிவு, பயணிகள் சேவை அனுமதிச் சீட்டுகளை வழங்குவதற்கான ஏற்பாடுகளை உருவாக்க தேசிய போக்குவரத்து ஆணையச் சட்டத்தில் திருத்தம் செய்ய நடவடிக்கை எடுக்கவில்லை என்றும் கூறுகிறது.

குறைந்தபட்ச தொழில்நுட்ப மதிப்பின் அடிப்படையில், ரூ. 3,000, ரூ. 10,000 மற்றும் ரூ. 15,000 வரையிலான பல்வேறு மதிப்புகளில் பயணிகள் சேவை அனுமதிச் சீட்டுகள் வழங்கப்பட்டதாக அறிக்கை கூறுகிறது.

இதற்கிடையில், இலங்கை போக்குவரத்து அட்டை திட்டத்திற்காக ஆணையம் நான்கு லட்சம் ரூபாய்க்கு மேல் செலவிட்டிருந்தது, ஆனால் அது சாத்தியக்கூறு ஆய்வு இல்லாமல் தொடங்கப்பட்டதால், தோல்வியடைந்தது. 2023 ஆம் ஆண்டளவில் திட்டமும் நிறுத்தப்பட்டது என்று தணிக்கை அலுவலகம் கூறுகிறது.

இந்தத் தகவல் தேசிய போக்குவரத்து ஆணையத்தின் 2023 ஆண்டு அறிக்கையில் சேர்க்கப்பட்டுள்ள தணிக்கை ஆவணத்தில் கூறப்பட்டுள்ளது. இந்த ஆண்டு அறிக்கை ஜூன் 17 நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

## பயங்கரவாதச்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தடைச்சட்டத்தின்கீழ் மொஹமட் ருஷ்டி கைதுசெய்யப்பட்டமை தொடர்பில் தமது ஆணைக்குழுவினால் தன்னியல்பாக முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் ஊடாகக் கண்டறியப்பட்;ட விடயங்கள் மற்றும் பரிந்துரைகள் குறித்து விளக்கமளித்தும், பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்கவேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியும் நீதியமைச்சர் ஹர்ஷன நாணயக்காரவுக்கு கடந்த வாரம் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு கடிதமொன்றை அனுப்பிவைத்துள்ளது.

மொஹமட் லியதீன் மொஹமட் ருஷ்டி பயங்கரவாதத்தடுப்பு விசாரணைப்பிரிவினர் மற்றும் பொலிஸாரினால் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின்கீழ் கைதுசெய்யப்பட்டு, தடுத்துவைக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் தமக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் தன்னியல்பாகவும், ருஷ்டியின் தாயாரினால் அளிக்கப்பட்ட முறைப்பாட்டின் அடிப்படையிலும் விசாரணைகளை முன்னெடுத்த மனித உரிமைகள் ஆணைக்குழு, தம்மால் கண்டறியப்பட்ட விடயங்கள் மற்றும் பரிந்துரைகள் அடங்கிய அறிக்கையை ஜூன் 12 வெளியிட்டது.

அதுகுறித்து தமது கடிதத்தின் ஊடாக நீதியமைச்சருக்குத் தெளிவுபடுத்தியிருக்கும் ஆணைக்குழு, பயங்கரவாதத்தடுப்பு விசாரணைப்பிரிவானது ருஷ்டியை 'மதரீதியான கடும்போக்காளர்' எனச் சித்தரிப்பதற்கு முற்பட்டதாகவும், அது அவரது அடிப்படை உரிமைகளில் ஒன்றான ஒடுக்குமுறைகளுக்கு உள்ளாக்கப்படாதிருப்பதற்கான உரிமையை மீறும் நடவடிக்கையாகும் எனவும் சுட்டிக் காட்டியுள்ளது.

அத்தோடு அரசமைப்பின் 14(1)(ஏ), 10, 13(1), 13(2), 13(5), 14(1)(எச்), 14(1)(ஜி), 12(1) மற்றும் 12(2) ஆகிய சரத்துக்களின் ஊடாக உறுதிப்படுத்தப்பட்டிருக்கும் ருஷ்டியின் அடிப்படை உரிமைகள் பயங்கரவாதத் தடுப்புவிசாரணைப்பிரிவினரால் மீறப்பட்டிருப்பதாகவும் நீதியமைச்சருக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அதேவேளை மொஹமட் ருஷ்டியின் வழக்கானது பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் மிகமோசமான ஒடுக்குமுறை போக்கையும், சட்ட அமுலாக்க அதிகாரிகள் அச்சட்டத்தை முறையற்றவிதத்தில் பயன்படுத்துவதற்கு உள்ள சாத்தியப்பாட்டையும் தெள;ளத்தெளிவாகக் காண்பிப்பதாகவும் அக்கடிதத்தில் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

அதுமாத்திரமன்றி குற்றம் தொடர்பான பரந்துபட்ட வரைவிலக்கணம், விசாரணைகளின்றி நீண்டகாலம் தடுப்புக்காவலில் வைப்பதற்கான சாத்தியம், குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் சந்தேகநபரை நீதிவான் முன்னிலையில் ஆஜர்ப்படுத்தவேண்டிய அவசியமின்மை, பிணைக்கோரிக்கை நிராகரிப்பு மற்றும் பொலிஸாரிடம் வழங்கும் வாக்குமூலம் நீதிமன்றத்தினால் சாட்சியாக ஏற்கப்படல் ஆகிய ஐந்து விடயங்களும் இச்சட்டத்தின் ஒடுக்குமுறை போக்குக்கு மிகமுக்கிய காரணங்களாக அமைந்திருப்பதாகவும், இக்காரணங்களுக்காக பயங்கரவாதத்தடைச்சட்டம் முற்றாக நீக்கப்படவேண்டும் எனவும் நீதியமைச்சர் ஹர்ஷன நாணயக்காரவுக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் மனித உரிமைகள் ஆணைக்குழு வலியுறுத்தியுள்ளது.

## ஈரான்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பிலுள்ள ஐக்கிய மக்கள் சக்தி அலுவலகத்தில் நேற்று செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்த அவர், மேலும் தெரிவித்ததாவது:

ஈரான் – இஸ்ரேல் மோதல் இலங்கையின் தேயிலை ஏற்றுமதி துறையில் நேரடியாக பாதகமான தாக்கத்தை செலுத்தும். எமது நாட்டின் தேயிலையை இறக்குமதி செய்வதில் ஈரான் முன்னிலையிலுள்ளது. அது மாத்திரமின்றி மத்திய கிழக்கில் எரிபொருள் விநியோகத்தில் ஈரான் பிரதான பங்கினை வகிக்கிறது. மறுபுறம் இஸ்ரேலில் அதிகளவான இலங்கையர்கள் தொழில் புரிகின்றனர்.

இந்த இரு நாடுகளுக்கும் இடையிலான மோதல்களால் எம்மைப் போன்ற சிறிய நாடுகளின் பொருளாதாரம் பாரியளவில் பாதிக்கப்படும். அத்தோடு டொலர் நெருக்கடியும் ஏற்படும். எனவே இவற்றைக் கருத்திற் கொண்டு முன்னாயத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

இந்த நெருக்கடிகளை எதிர்கொள்வதற்கு ஆளும்தரப்பு எவ்வாறான நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது எனக் கேள்வியெழுப்புகின்றோம். இவ்வாண்டு இதுவரையான காலப்பகுதியில் ஆளும்தரப்பு அரச வருவாயில் நிர்ணயிக்கப்பட்ட இலக்கினை அடையவுமில்லை. அதேவேளை பொருளாதார வளர்ச்சி வேகம் 4.6 சதவீதமாக வீழ்ச்சியடைந்துள்ளது.

2026ஆம் ஆண்டாகும் போது இது 3 சதவீதமாக வீழ்ச்சியடைய வாய்ப்புள்ளது. இவ்வாறிருக்கையில் 2027ஆம் ஆண்டின் பின்னர் நாம் எவ்வாறு வாக்குறுதியளித்தவாறு கடன் மீள செலுத்துவோம்?

உலகப்போர் நிலைமையும், அமெரிக்காவின் பொருளாதாரப் பின்னடைவும் இலங்கைக்கு சிறந்த வாய்ப்பாகும் என அமைச்சர் சுனில் ஹந்துனெத்தி குறிப்பிடுகின்றார்.

அது எவ்வாறு என்று எமக்கு புரியவில்லை. எரிபொருள் நெருக்கடி ஏற்பட்டால் ஏனைய அனைத்துப் பிரச்சினைகளும் இயல்பாகவே அதிகரிக்கும். தற்போது உலக சந்தையில் எரிபொருள் விலை அதிகரித்து வருகிறது. இது எவ்வாறு இலங்கைக்கு சாதகமாகும்?

ஆளும்தரப்பினரின் அறிவற்ற கருத்துக்களால் இறுதியில் நாட்டு மக்களே பிரச்சினைகளை எதிர்கொள்ள நேரிடும் - என்றார்.

காலைக்கதிர் ஆசிரியர்பீட
தொடர்புகளுக்கு

076 3983858

மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com

# ‘அணையா விளக்கு’ போராட்டத்தில் அனைவருமே இணையவேண்டும்

## சிறிநேசன் எம்.பி. கோரிக்கை

செம்மணிப் புதைகுழி சர்வதேச கண்காணிப்பின் கீழ் விசாரணை செய்யப்படவேண்டும், ஆய்வுசெய்யப்படவேண்டும் என்ற கோரிக்கைகளை முன்வைத்து முன்னெடுக்கும் போராட்டத்துக்கு அனைவரும் இணைந்து வலுசேர்க்கவேண்டும்.தமிழ் தேசியபற்றாளர்கள் மட்டுமல்லாமல் மனித உரிமை செயற்பாட்டாளர்களும் பூரண ஆதரவு வழங்கவேண்டும். நீதிகோரி இளையோரால் நமக்காக முன்னெடுக்கப்படும் இந்த அணையா விளக்கு போராட்டத்தில் அனைவரையும் பங்குபற்றுமாறு கேட்டுக்கொள்கின்றேன் என்று தமிழ் அரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிறிநேசன் கோரிக்கை விடுத்துள்ளார்.

அவர் மட்டக்களப்பு, செட்டிபாளையத்தில் உள்ள தனது இல்லத்தில் நேற்றுக் காலை செய்தியாளர்களைச் சந்தித்து இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

உள்நாட்டுபொறிமுறையின்ஊடாகப்படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்கள் தொடர்பான விடயங்களோ, படுகொலை செய்யப்பட்ட அரசியல் தலைவர்கள் தொடர்பான விடயங்களோ வெளியில் கொண்டு வரமுடியாத கையறு நிலையில் அரசுகள் காணப்படுகின்றன. இது தொடர்பான விசாரணைகள் சர்வதேசரீதியில் நடைபெற்றால்தான் உண்மைகள் வெளியில் வரக்கூடிய வாய்ப்புகள் உள்ளன.

செம்மணிப் பகுதியில் முன்னெடுக்கப்படும் மனித புதைகுழி அகழ்வின் போது 19 எலும்புக் கூடுகள் மீட்கப்பட்டுள்ளன. கண்டெடுக்கப்பட்டதில் மூன்று குழந்தைகளின் எலும்புக் கூடுகளும் அடையாளம் காணப்பட்டுள்ளன. கடந்த சந்திரிகா அம்மையாரின் ஆட்சிக் காலத்தில் இவ்வாறான புதைகுழிகள் அமைக்கப்பட்டுள்ளனவோ என்ற சந்தேகம் ஏற்பட்டுள்ளது.

யுத்தம் முடிவடைந்து 16 வருடங்களை கடந்துள்ள நிலையில்காணாமல்ஆக்கப்பட்டவர்களின்பிரச்சினை என்பது தொடர்கதையாவுள்ளது. தமிழர்கள் வயது வேறுபாடுகள் இல்லாமல் கொல்லப்பட்டு புதைகுழிகளில் புதைக்கப்பட்டிருக்கின்றார்கள் என்பதைப் பார்க்கும்போது இதனையே நாங்கள் இனப்படுகொலை என்கின்றோம்.

இதனடிப்படையில் தற்போது இளம் தலைமுறையைக் கொண்ட அமைப்பானது இந்த விடயத்தைச் சர்வதேசத்தி;ன முன்னிலைக்கு கொண்டுவரவேண்டும். மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் செம்மணி வளைவு உள்ள பகுதியில் நாளை 23 ஆம் திகதி தொடக்கம் மூன்று நாள்களுக்கு அணையாதீபம் என்ற கருப்பொருளில் போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளனர்.

இது மனித உரிமை மீறலோடு சம்பந்தப்பட்ட ஒரு பிரச்சினையாகும். இப்படியான பிரச்சினைகளுக்கு சர்வதேச ரீதியான ஒரு தீர்வைக் காண வேண்டும், சர்வதேச நீதி கிடைக்க வேண்டும், சர்வதேசத்தின் மேற்பார்வையின் கீழ் இந்தப் புதைகுழிகள் அகழப்படும்போதுதான் உண்மைகளை வெளிக்கொண்டுவர முடியும் என்ற அடிப்படையில் மக்கள் செயல் எனச் சொல்லப்படுகின்ற இளையோர் தன்னார்வ அமைப்பானது இந்தச் செயற்பாட்டை மேற்கொள்ளவுள்ளது. காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளை உள்ளடக்கிய தமிழ் சமூகம், தமிழ் பேசும் சமூகம், பாதிக்கப்பட்டவர்கள் எமது தமிழரசுக் கட்சி சார்ந்தவர்கள் ஆதரவாளர்கள் மற்றும் தமிழ் தேசியப் பற்றாளர்கள், மனிதவுரிமை செயற்பாட்டாளர்கள் இந்த ஜனநாயக ரீதியான மனிதவுரிமைப் போராட்டத்துக்கு முழுமையான ஆதரவை வழங்க வேண்டும்.

அணையாதீபம் என்ற இந்தப் போராட்டமானது எங்களுடைய விடுதலைத் தாகம் அணையாமல் இருந்து கொண்டிருக்கின்றது, மனிதவுரிமை சம்பந்தமான விடயங்களில் நீதி தேடுகின்ற விடயமும் அணையாது எங்களுடைய மனங்களில் இருக்கின்றது என்ற அடிப்படையில் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்படுகின்றது. மனித உரிமை பேரவையின் ஆணையாளர் வோல்கர் டக்கர் இலங்கைக்கு விஜயம் செய்யவிருக்கின்றார்.

பல தடுப்புகளுக்கு மத்தியில் அவர் இங்கு வரவிருக்கின்றார். அந்த வேளையில் இப்படியான மனிதவுரிமை மீறல்களுக்கு நீதி கிடைக்காத விடயங்கள் சம்பந்தமாக போராட்டங்களை முன்னெடுக்க வேண்டிய செயற்பாடுகள் இருக்கின்றபோது வடக்கு கிழக்கு என்றில்லாமல் பாதிக்கப்பட்ட உறவுகள், மக்கள் அனைவரும் இந்தப் போராட்டத்தில் உங்களுடைய பங்களிப்பை செய்யவேண்டும். மனிதாபிமானம் மிக்கவர்கள், மனிதவுரிமை செயற்பாட்டாளர்கள் மொழி வேறுபாடில்லாமல் கலந்துகொள்ளவேண்டும். செம்மணியில் நடைபெறவுள்ள இந்த மூன்று தினங்கள் கவனவீர்ப்பு போராட்டம் சர்வதேசத்தின் மத்தியில் இந்த அநியாயங்களை கொண்டு செல்லும் போராட்டமாகும்.இந்தப் போராட்டத்துக்கு மக்கள் அனைவரும்குரல் கொடுக்க வேண்டும், ஆதரவு கொடுக்க வேண்டும்.

கிருஷாந்தி என்ற பாடசாலை மாணவி பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டு படுகொலை செய்யப்பட்டார். அந்தவேளையில் அது சம்பந்தமான விசாரணை நடைபெற்றபோது சோமரத்ன ராஜபக்ஷ என்ற கோப்ரல், அந்தப் படுகொலையோடு சம்பந்தப்பட்ட கொலையாளி எனக் கண்டுபிடிக்கப்பட்டது. அவர் விசாரணையின்போது குறிப்பிட்ட ஒரு விடயத்தை நினைவுபடுத்த விரும்புகின்றேன். செம்மணிப் புதைகுழியில் பலநூற்றுக்கணக்கான தமிழர்கள் கொல்லப்பட்டு புதைக்கப்பட்டிருக்கின்றார்கள், அந்தக் கொலைகளைச் செய்த இராணுவ வீரர்கள் யார் என்பதையும் அவர் அந்த இடத்தில் குறிப்பிட்டிருந்தார். கப்டன் துடுக்கல என்ற பெயரையும் அவர் குறிப்பிட்டிருந்தார். இவ்வாறான சாட்சியங்களை அவர்கள் அப்படியே மூடிமறைத்து விட்டார்கள்.

இந்த நிலையில் இப்போது மீண்டும் மண்ணை அகழும் போது எலும்புக் கூடுகள் வந்துகொண்டிருக்கின்றபடியால் இதற்கு உரிய சர்வதேச நீதி வேண்டும். சர்வதேச மேற்பார்வையில் இந்தப் புதைகுழிகள் அகழப்படவேண்டும்.

இந்த முக்கியமான போராட்டத்துக்கு நாங்கள் அனைவரும் வலு சேர்க்க வேண்டும். பூரணமான உதவியை வழங்க வேண்டும். இளையோர் அமைப்பு நமக்காக செய்யும் இந்த அணையாத தீபம் என்ற போராட்டத்துக்குநாங்கள் அனைவரும் அணையாமல், ஒதுங்காமல் பங்குகொள்ளவேண்டும்.- என்றார்.

## உள்ளூராட்சி சபைகளில் வெற்றிபெற்ற பெண்களுக்கு யாழ். நகரில் கௌரவிப்பு

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் உள்ள உள்ளூராட்சி சபைகளில் போட்டியிட்டு வெற்றி பெற்ற பெண்களுக்கான கௌரவிப்பு நிகழ்வு இன்று இடம்பெற்றது.

யாழ். சமூக செயற்பாட்டு மையத்தில் ஏற்பாட்டில் இன்று காலை யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் விருந்தினர் விடுதியில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

இதன்போது உள்ளூராட்சி சபைத் தேர்தலில் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் வட்டாரங்களில் போட்டியிட்டு வெற்றிபெற்ற 15 பெண்கள் கௌரவிக்கப்பட்டனர்.

நிகழ்வில் வடக்கு மாகாண பிரதம செயலாளர் தனுஜா, யாழ். பல்கலைக்கழகத்தின் சட்டத்துறைத் தலைவர் கோசலை, யாழ். மாநகர சபை மேயர் மதிவதனி, வட்டாரங்களில் வெற்றி பெற்ற உள்ளூராட்சி சபைகளின் பெண் உறுப்பினர்கள், சமூகச் செயற்பாட்டாளர்கள் எனப் பலர் கலந்துகொண்டிருந்தனர்.

யாழ். பல்கலைக்கழகத்தின் சட்டத்துறை தலைவர் கோசலை நிகழ்வில் சிறப்புரையாற்றினார்.




## சயந்தனின் மூன்று நூல்கள் யாழ்ப்பாணத்தில் வெளியீடு

குழந்தை சத்திர சிகிச்சை நிபுணரும் சிரேஷ்ட விரிவுரையாளருமான வைத்தியர் சயந்தன் எழுதிய குழந்தை சத்திர சிகிச்சை தொடர்பான மூன்று நூல்கள் யாழ்ப்பாணத்தில் சனிக்கிழமை வெளியிட்டு வைக்கப்பட்டது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்திற்கென யாழ் நகரில் அமைக்கப்பட்ட மருத்துவப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சித் தொகுதி கட்டிடத்தில் வெளியீடு இடம்பெற்றது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சிறீசற்குணராஜா பிரதம விருந்தினராகவும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொண்டு நூலை வெளியிட்டு வைத்தனர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவ பீட பீடாதிபதி வைத்தியர் சுரேந்திரகுமாரன், சத்திர சிகிச்சை நிபுணர் வைத்தியர் ரவிராஜ், குழந்தை சத்திர சிகிச்சை நிபுணர்களான வைத்தியர் சஞ்சய மற்றும் வைத்தியர் சஜீவன், மதத் தலைவர்கள், வைத்திய நிபுணர்கள், வைத்தியர்கள், மருத்துவ பீட மாணவர்கள் என பலரும் நிகழ்வில் கலந்துகொண்டனர்.



நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

# பொறுப்பேற்கும் நேரம் இது

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஆணையர் இலங்கைக்கு இன்று வருகை தரும் நேரத்தில், அவர் யாழ்ப்பாணத்தில் உள்ள செம்மணி, சிந்துப்பாத்தி பகுதியில் கண்டுபிடிக்கப்பட்ட மனிதப் புதைகுழிகளை பார்வையிடுவதைத் தடுக்கப்போவதில்லை என அயலுறவுத்துறை அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ள தகவல், வெளிப்படைத்தன்மைக்கான ஆளும்தரப்பின் தயார்ப்பாட்டைப் பிரதிபலிப்பதுபோல் தோன்றுகிறது. மேலும் அவர், ஐ.நா. உயராணையருக்கு நாடளாவிய ரீதியில் சுதந்திரமாகச் செல்ல அனுமதி வழங்கப்படும் என்றும் தெரிவித்துள்ளார்.

இது ஒரு முன்னேற்றமென்பது உண்மைதான். ஆனால், இந்த 'அனுமதி' என்பது பிரச்சினையின் தொடகக்கட்டமே. முக்கியமானது, ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கை அரசு கடந்த ஆண்டுகளில் வழங்கிய வாக்குறுதிகளை முறையாக நிறைவேற்றுவதுதான். அதாவது, கடந்த கால அரசியல் படுகொலைகள், கட்டாயமான காணாமலாக்குதல்கள், போர்க் குற்றச்சாட்டுகள், சர்வதேச சட்ட மீறல்கள், மனித உரிமைகள் மீறல்கள் மற்றும் இன அழிப்புக் குற்றச்சாட்டுகள் தொடர்பாக உண்மைத்தன்மையுடன் விசாரணை நடத்துவதும், பாதிக்கப்பட்டோருக்கு நீதி வழங்குவதும், பொது சேவைகளில் நியாயமான பங்கேற்பு மற்றும் அரசியல் தீர்விற்கான உரிமையை உறுதிப்படுத்துவதும் அத்தியாவசியம்.

இலங்கை, ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் பல தீர்மானங்களில் இணைந்து கொண்டு முக்கியமான வாக்குறுதிகளை அளித்திருக்கிறது. ஆனால் நடைமுறையில் மேற்கொள்ளப்பட்ட செயல்கள் மிகவும் குறைவாகவே இருக்கின்றன. சர்வதேச விசாரணைகளுக்கு எதிர்ப்பு, உள்ளூர் விசாரணைகள் நடத்தப்படும் என்று தெரிவிக்கின்றபோதும் கடந்த 15 வருடங்களில் அதற்கான ஒரு சிறு முயற்சிகூடச் செய்யாதது, நிரந்தர தீர்வுகளுக்கான அரசியல் விவாதத்தின் மர்மமான மௌனம் ஆகியவை, சர்வதேச நம்பிக்கையை இழக்கும் சூழலை உருவாக்கியுள்ளன.

இந்நிலையில், ஐ.நா. உயராணையரின் வருகையை வெறும் சுற்றுலா போல நடத்தாமல், அது ஒருவிதமான அறிக்கையளிக்கும்வாயிலாகபயனுள்ளதாக்கவேண்டும். அவர் பார்க்கும் ஒவ்வொரு புதைகுழியும், ஒவ்வொரு கணவனை இழந்த மனைவியின் கதறும் குரலும், ஒவ்வொரு காணாமற்போனோர் தாயின் கண்ணீரும், இலங்கையின் வரலாற்றுக்குள் புதைந்துள்ள உண்மைகளை உலகிற்கு எடுத்துச் சொல்லும் ஆவணமாக இருக்கவேண்டும்.

எனவே, பார்ப்பதற்கு அனுமதி கொடுப்பதைவிட, அவர் தலைமையிலான ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவின் விசாரணையின் முடிவுகளை ஏற்று செயல்படுவதற்கும் ஒத்துழைப்பதற்கும் ஆளும்தரப்புத் தன்னைத்தானே தயார்ப்படுத்திக்கொள்வது அதிக முக்கியம். ஐ.நா. மனித உரிமை ஆணையரின் வருகை ஒரு நல்ல தொடக்கமாக இருக்கலாம். ஆனால் உண்மையான மாற்றம், வாக்குறுதிகளின் நிறைவேற்றத்தில்தான் இருக்கிறது. சர்வதேச சமூகமும், இலங்கையரின் நம்பிக்கையும், அரசின் நடைமுறை மாற்றத்தில்தான் உறுதியாக நிலைபெற முடியும்.

# ஐ.நா. மனித உரிமைகள் ஆணையர் யாழ்ப்பாணம், திருமலைக்கும் பயணம்

நாளை திங்கட்கிழமை கொழும்புக்கு வரும் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் வோல்கர்டர்க்ஜூன்25யாழ்ப்பாணத்துக்கும் திருகோணமலைக்கும் நேரடியாகப் பயணம் செய்வார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

அவரது யாழ்ப்பாணப் பயணத்தில் அவர் செம்மணி, சிந்துப்பாத்தி புதைகுழிப் பகுதியையும் பார்வையிடுவதற்கான வாய்ப்புக்கள் இருக்கின்றன என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையர் யாழ்ப்பாணம் வரும்போது தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களையும் அங்கேயே சந்திப்பார் என்றும் தெரிகிறது. இந்தச் சந்திப்பில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்ற குழுத் தலைவர் சிறீதரன் மற்றும் சாணக்கியன் ஆகியோர் பங்குபற்றுவர் எனத் தெரிகின்றது.

இன்று கொழும்பு வரும் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் இன்று மாலை நாடாளுமன்றக் குழு அறையில் நாடாளுமன்றக் கட்சிகளின் தலைவர்களை ஒன்றாகச் சந்திக்கின்றார். அவர் தனது பயணத்தில் இலங்கை அரசுத்தலைவர், பிரதமர், அரசியல் கட்சிகளின் தலைவர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் ஆகியோரைச் சந்திப்பார் என்று ஐ.நா. அலுவலகம் தனது உத்தியோகபூர்வ அறிவிப்பில் தெரிவித்துள்ளது.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் இலங்கை வரும் அதே சமயத்தையொட்டி இலங்கையின் பிரதமர் ஹரிணி கனடாவிற்குப் புறப்படுகின்றார். இதனால் இருவருக்கும் இடையிலான சந்திப்புக் கேள்விக்குறியாகவே இருக்கின்றது.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் கொழும்பில் வந்து இறங்கிய கையோடு பிரதமருக்கும் அவருக்கும் இடையில் சந்திப்பு நடப்பதற்கு வாய்ப்பு இருந்தால் மட்டுமே அந்தச் சந்திப்பு இடம்பெறும் எனக் கூறப்பட்டது.

# ஐ.நா. ஆணையர் எங்கு செல்லவும் தடையற்ற அனுமதி வழங்கப்படும்

## ஆளும்தரப்பு அறிவிப்பு: செம்மணிக்குச் செல்லவும் தடையில்லை

ஐக்கியநாடுகள்மனிதஉரிமைகள்ஆணையாளர் வோல்கர் டர்க், யாழ். செம்மணி மனிதப் புதைகுழியைப் பார்வையிடுவது உட்பட எங்கு செல்வதற்கும் தடையற்ற அனுமதி வழங்கப்படும் என்று வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

'ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் செம்மணி மனிதப் புதைகுழிப் பகுதியில் விஜயமமேற்கொள்வதற்கும், மக்களைச் சந்திப்பதற்கும் தடையற்ற அனுமதி வழங்கப்படும்' என்றார் அவர்.

கடந்த கால மனித உரிமை மீறல்களைக் கையாள்வது குறித்தும், நாட்டின் நல்லிணக்கத்துக்கான தனது அர்ப்பணிப்பு குறித்த நேர்மையை வெளிப்படுத்துவதற்கும் அரசு விரும்புவதால் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் மக்களைச் சந்திப்பதற்கும், அனைத்து இடங்களுக்குச் செல்வதற்கும் எந்தத் தடையையும் விதிக்கப் போவதில்லை என்று அவர் மேலும் தெரிவித்தார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் ஒருவர் ஒன்பது வருடங்களின் பின்னர் இலங்கைக்கு வருகை தருகிறார். இறுதியாக 2016 ஆம் ஆண்டு பெப்ரவரியில் மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாகப் பதவி வகித்த வேளை செயித்ராத் அல் ஹூசைன் இலங்கைக்கு வந்திருந்தார்.

# லஞ்சம் பெற்ற குற்றச்சாட்டில் பொலிஸார் இருவர் மாட்டினர்

அம்பாறை நகரில் பொலிஸ் உத்தியோகத்தர்கள் இருவர் லஞ்ச ஒழிப்பு ஆணைக்குழுவால் நேற்றுச் சனிக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளனர். மணல் போக்குவரத்தை எவ்வித இடையூறுமின்றி மேற்கொள்வதற்கு அம்பாறையைச் சேர்ந்த வர்த்தகரொருவரிடம் 25 ஆயிரம் ரூபாயை லஞ்சமாகப் பெற்றமை மற்றும் அதற்கு உடந்தையாக இருந்தமை ஆகிய குற்றச்சாட்டுகளில் குறித்த இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அம்பாறை வலய குற்ற விசாரணை பிரிவைச் சேர்ந்த பொலிஸ் சார்ஜன்ட்கள் இருவரே கைதாகியுள்ளனர். இந்த நிலையில், சந்தேக நபர்கள் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கடும் காற்றுடனான மழையால் இசை நிகழ்வு நேற்று நிறுத்தம்

யாழ்ப்பாணத்தில் நேற்று முன்னிரவில் திடீரென கடும் காற்றுடன் கூடிய மழை பெய்தது. இதனால் நேற்று நடைபெறவிருந்த இசை நிகழ்வு இடைநிறுத்தப்பட்டது.

யாழ்ப்பாணம் கலாச்சார மண்டப வளாகத்தில் திறந்தவெளியில் நேற்று மாலை தென்னிந்திய இசை கலைஞர்களின் பங்கேற்புடன் இசை நிகழ்வு ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

தனியார் நிறுவனம் ஒன்றின் ஏற்பாட்டில் 5000 , 3000 மற்றும் 2000 ரூபாய் பெறுமதியான நுழைவு சீட்டுக்கள் விற்பனை செய்யப்பட்டு, நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது

இந்நிலையில் இசை நிகழ்வு தொடங்க இருந்த நேரத்தில் திடீரென கடும் காற்றுடன் கூடிய மழை பெய்தது. இதனால் நிகழ்வுக்காக போடப்பட்டிருந்த கதிரைகள், அருகில் இருந்த பந்தல்களின் தகரங்கள் என்பன காற்றில் தூக்கி வீசப்பட்டன. பார்வையாளர்கள் அங்கிருந்து உயிரைக் கையில் பிடித்தபடி ஓடிச் சென்றனர்.

காற்றும் மழையும் சுமார் 1 மணி நேரத்திற்கு மேலாக தொடர்ந்தமையால், நிகழ்வு காலவரையின்றி ஒத்திவைக்கப்படுவதாக ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.

காலைக்கதிர் Kalaikkathir

அம்பாறையில்

# காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள் இன்று போராட்டம்

அம்பாறை – தம்பிலுவில் மத்திய சந்தைப் பகுதியில் இயங்கி வருகின்ற அம்பாறை மாவட்ட காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் அலுவலகத்தை உடனடியாக அகற்றுமாறு மக்களின் வாக்குகளைப் பெற்று தவிசாளராகிய சசிக்குமார் என்பவரால் அறிவுறுத்தப்பட்டுள்ளது. இதற்கு எதிர்ப்பு தெரிவித்து இன்று காலை அம்பாறையில் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

கிளிநொச்சியில் வடக்கு, கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தின் செய்தியாளர்கள் சந்திப்பு நேற்று நடைபெற்றபோதே சங்கத்தின் தலைவி கலாறஞ்சினி இதனைத் தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

காணாமல் ஆக்கப்பட்ட எமது பிள்ளைகளுக்கு இன்று வரை நீதி கிடைக்கவில்லை.இந்த அரசும் அதற்கான நீதியை பெற்று தருவதற்கு இது இதுவரை ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எதுவும் எடுக்கவில்லை.

அம்பாறை– தம்பிலுவில் மத்திய சந்தை பகுதியில் இயங்கி வருகின்ற அம்பாறை மாவட்ட காணாமல் ஆக்கப்பட்டவர்களின் அலுவலகத்தை உடனடியாக அகற்றுமாறு அதன் தலைவிக்கு மக்களின் வாக்குகளை பெற்று தவிசாளராகிய சசிக்குமார் என்பவரால் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதற்கு எதிர்ப்பு தெரிவித்து நாளை (இன்று) காலை அம்பாறையில் போராட்டம் முன்னெடுக்கப்பட உள்ளது.

இலங்கைக்கு வருகை தரும் ஐ.நா. பிரதிநிதி காணாமல் ஆக்கப்பட்டவர்களின்னன உறவினர்களைச் சந்திப்பதற்கும் செம்மணிப்புதை குழி மற்றும் கொக்குத்தொடுவாய் மன்னார் போன்ற புதைகுழிகளைப் பார்வையிடுவதற்கும் அழுத்தம் கொடுக்கவேண்டும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.










# உங்கள் கனவை நனவாக்க ...!

## NVQ Level 3 & 4 Courses

புதிய பிரிவுகள் ஆரம்பம் 20.04.2025

கற்கும் போதே தொழில் ஆற்றக் கூடிய வாய்ப்பு



- CARE GIVER COURSE (பராமரிப்பாளர் பயிற்சி)
- NURSE ASSISTANT COURSE (தாதிய உதவியாளர் பயிற்சி)

கற்கைநெறி மொழி:ஆங்கிலம்/தமிழ்
இந்த கற்கைநெறி முடிவடைந்தவுடன் 3 மாதங்கள் பயிற்சி வழங்கப்படும்

தகுதி:
- வயது 16 அல்லது அதற்கு மேற்பட்டவர்கள்
- ஆங்கிலத்தில் அடிப்படை அறிவு
- GCE O/L இல் குறைந்தது 05 பாடங்களில் தேர்ச்சி

JDR HEALTH CARE (PVT) LTD
JDR PARAMEDICAL ACADEMY

46, Brodie Lane , Jaffna.
தொடர்பு:070 7070 722



# முல்லை ஓய்வு நகர்
## Mullai Rest City

எழுதுமட்டுவாழ் நகரில்
2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!

இயற்கையான சூழலில் உங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!

உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் – பாரம்பரிய முறையிலான வாழ்க்கை – ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் – பொழுதுபோக்கு அம்சங்கள்



முதியோர் பராமரிப்பு வசதி – தியான மண்டபம் – மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் – உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் – பாரம்பரிய உணவகம் – பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் – யோகா நிலையம்
விருந்தினர் விடுதி – சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் – தாரா பண்ணை
பூங்கா – நடைபயிற்சிப் பாதை – உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி – விளையாட்டு மைதானம்

SUPERMARKET

4th Project

இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd



தொடர்புகளுக்கு: 0777 43 5557


Study
MBBS
in China
SLMC APPROVED
Dalian Medical University
YOUR PATH TO WORLD CLASS MBBS
JDR HEALTH CARE PVT[LTD]
SEPTEMBER 2025
ADMISSION
OPEN
CONTACT US
FOR ADMISSION
0701348384


JRIDE
இலங்கையின் பயணிகள் செயலி
SRI LANKA'S
TAXI APP FROM JAFFNA
5%
இப்போது நாம்
இலங்கை முழுவதும்
காத்திருப்புக்கு விடுதலை!
www.jride.lk
மகிழ்ச்சியான பாதுகாப்பான பயணம் திருப்தியான கட்டணம்!